
உ

அன்பே சிவம்

# வாரம் தோறும் இறைவனை துதிக்கும் பாடல்கள்



தொகுத்து வெளியிடுபவர்

நடராஜா செல்வஜோதி

ஈழத்து திருத்தலங்களை தரிசிக்கும்

திருத்தல யாத்திரைச் சங்கம்

268, காந்திநகர்,

அன்புவழிபுரம்,

திருகோணமலை.

12.06.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* விநாயகர் துதி

* தேவாரம்

* திருவாசகம்

* திருவிசைப்பா

* திருப்பல்லாண்டு

* திருப்புராணம்

* திருப்புகழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி

அன்பு நெறி தழைத்தோங்க அமைதி – எங்கும் திகழ
இனிய தமிழ் ஈழத்தில் இலங்கித் திகழ
அன்பே சிவமென்னும் அறு சமயக் கொள்கையினை
கனிவுடனே உரைப்பதற்குக் கணபதியே துணை.

## நந்தி துதி

நந்தி எம் பெருமான் தன்னை நாள் தோறும் வழிபட்டால்
புத்தியில் ஞானம் சேரும் - புகழ் கல்வி தேடிவரும்
இவ்வுலக இன்பம் யாவும் இவரடி தொழ உண்டு
அவ்வுலக அருளும் கூட அவர் துதிப் பாடல்களுக்குண்டு
முற்பிறவி வினைகள் யாவும் தீயிட்ட மெழுகாகும்
நந்தியின் பார்வை பட நலன்கள் உடன் கிட்டும்
ஈசனுக்கு எதிர் அமர்ந்து இறையூஞ்சல் ஆட்டுவிக்கும்
நந்தீசர் நற்பாதம் நாம் தொழுவோம்.

## சிவன் துதி

சிந்தையில் சிவனை வைக்க
முந்தை வினை அகலும்
சிந்தையில் சிவனை வைக்க
சித்தி தொடர்ந்து வரும்
சிந்தையிலே சிவனை வைக்க
புத்தி ஒளிர்ந்து நாளும்
சிந்தையிலே சிவனை வைக்க
சக்தி துணையிருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஸ்ரீ தஷிணாமூர்த்தி துதி

உலகில் எத்தனை தெய்வம் இருப்பினும்
உள்ளம் நிறை தெய்வம் வேறேதும் இல்லை

உலகினர்க்கு உபதேசம் செய்திடற் கென்றே
ஓங்கும் தஷிணாமூர்த்தி ஒருவரே தெய்வம்

ஆனந்த சாகரம் தண்மதி தகித்தவர்
அங்கத்தே நீறணிந்து உள்ளம் கவர்வார்

தானே உலக மாயை ஆக்கிட வல்ல
தஷிணா மூர்த்தியின் தாள் பணிவோமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனைத் துதிக்கும் வாரப் பதிகம்

அன்பே சிவம்

## ஞாயிறு

### விநாயகர் துதி

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

### தேவாரம்

நெஞ்சமுமக் கேயிட மாக வைத்தேன்
நினையாதொருபோது மிருந்தறியேன்
வஞ்சமிது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
அஞ்சே லுமென்னீர் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

### திருவாசகம்

சிந்தனை நின் தனக்காக்கி நாயினேன் தன்
கண்ணினை நின் திருப்பாதம் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த தைக்காக்கி ஐம்புலன் களார
வந்தனை ஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனை செந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச் சுடரே யிரண்டு மினித் தனிய னேற்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத் தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்று முதல் இன்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளறவீசிய சண்டிக்கிவ் வணத்தொடு முடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமுமருளிச்
சோதிமணி முடித்தாமுந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்கும் பரிசு வைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்தை
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்கும்
கானத்தின் எழு பிறப்பைக் கண் களிப்பக் கண்டார்கள்.

## திருப்புகழ்

அபசார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
யுனை நான் நினைந்தருள் பெறுவேனோ
இடமா முகன்றனக் கிளையோனே
இமவான் மடந்தை தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவினன் குடிப் பெருமானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திங்கள்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமிற் கனிந்து.

## தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே.

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்த மலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கருளியவா றார் பெறுவார் அச்சோவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை

மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்

செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த

கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போய கல

பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க

அன்ன நடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து

பின்னைப் பிறவியறுக்க நெறி தந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறி விளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே

கூறுமடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்றுருக வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே

மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே

ஆறுமுகம் ஆன பொருள் நீயருளல் வேண்டும்
ஆதி அருணசாலம் அமர்ந்த பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாய்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தினிளம் பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்தாரே.

## திருவாசகம்

வானாகி மண்ணாகி வளியாகி
ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய்
இன்மையுமாய்க்
கோனாகி யான் என் தென் றவரவரைக்
கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி
வாழ்த்துவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத் தாநந்தக் கனியே
அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சொல்வதறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
எல்லை வந்தருளியென்னை வழி கொண்டு கொண்டாய் போற்றி
எல்லையிலின்ப வெள்ளமெனக் கருள் செய்தாய் போற்றி
தில்லையம்பலத்து வாடும் சேவடி போற்றியென்னே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெரு வாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன்

## விநாயகர் துதி

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காக்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாடத்துப் பிள்ளையைப் பேணுவோம்.

## தேவாரம்

நிரைகழல் அரவம் சிலம் பொலியலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பெருங் கனமணி வரன்றிக்
குரை கட லோத நித்திலங் கொழிக்கும்
கோணமாமலை அமர்ந்தாரே.

## திருவாசகம்

வேண்டத் தக்கதறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன்றுண்டென்னில்
அதுவும் உந்தன் விருப்பன்றோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை யாண்டு கொண்டென்னுள்
இருட் பிழம்பற் வெறிந்த தெழுந்த
சுடர்மணி விளக்கினுள்ளொளி விளங்குந்
தூய நற்சோதியுட் சோதீ
அடல் விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே

## திருப்பல்லாண்டு

குழலொலி யாலொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருக
விழலொலி விண்ணளவுஞ் சென்று
விம்மிகு விருவா ரூரின்
மழவிடை யார்க்கு விழி விழி யாளாய்
மணஞ் செய் குடிப்பிறந்த
பழவடியா ரோடுங் கூடி எம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத் துவிகமே ஆக
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெரும் கூத்தின்
வந்த பேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலாமகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

காலனிடத் தணுகாதே காசியினியில் பிறவாதே
சீல அகத்திய ஞான தேனமுதைத் தருவாயே
மால்யக்கரியோனே மாதவரைப் பிரியோனே
நாலு மறைப் பொருளோனே நாமகிரிப் பெருமானே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாழன்

## விநாயகர் துதி

அல்லல்போம் வல்வினைபோம் அன்னை
வயிற்றிற் பிறந்த தொல்லை போம் போகாத்துயரம்போம்
நல்ல குணமதிக மாமருணைக் கோபுரத்தில் மேவு
கணபதியைக் கை தொழுதள் கால்

## தேவாரம்

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்ல விளக்கது நமச்சிவாயவே

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதித்து
உன்விரை யார் கழற்கென்
கைதாள் தலை வைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந் துன்னைப் போற்றி
சய சய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டு கொள்ளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

அன்ன நடையார் அமுத
மொழியார் அவர்கள் பயில் தில்லைத்

தெள்ளன் தமிழா இசையும்
கலந்த சிற்றம் பலந்தன்னுள்

பொன்னும் மணியும் நிரந்தர
தலத்துப் புலித்தோல் பியற்கிட்டு

மின்னின் இடையாள் உமையாள்
கான விகிர்தன் ஆருமே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய் மனத் தொண்டருள்ளீர்

சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறு நெறி சேராமே

வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப் பாகன்

பல்லாண் டென்னும் பதங் கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

கற்பனைக் கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோல நீதி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பரவி யோகமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் - எழில் நீறும்
இலங்கு நூலும் புலியதனாடையும் - மழுமானும்
அசைந்ததோடும் சிரமணி மாலையும் - முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய – குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற – முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் - நலியாதே
அசைந்த போதென் துயர் கெட மாமயில் - வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி

## விநாயகர் துதி

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயல்வலி வல முறை யிறையே

## தேவாரம்

தோடுடைய செவியன் விடை யேறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி பூசியென் னுள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் உனை நாட்பணிந்தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே.

## திருவாசகம்

வான நாடரும் அறியொ ணாத நீ
மறையின் ஈறுமுன் தொடரொ ணாதநீ
ஏனை நாடருந் தெரியொ ணாதநீ
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா
உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

மாலுமா மனம்தந் டிதன்கையில் சங்கம
வல்வினாள் மலைமகள் மதலை
வேலுலாந் தேவர் குல முழுதாளும்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக்கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தன் என் சேந்தன்
என்னும் என் மெல்லியல் இவளே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்த
அண்டங் கடந்த பொருள் ஆன
வில்லாதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா ஞான சற்குண நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்தினி பாதா
வெற்றி வேலாயுத பெருமானே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனி

## விநாயகர் துதி

கோவிலுறை கணபதியே கோலமயில் நாயகனே
தேவி உடனுறையும் கோணமாமலையானே
காத்து நின்றீர் காலமெல்லாம் காற்றுடம்பு தன்னை
ஏற்று நிற்பீர் எம்மை ஏழுலகும் தன்னில்.

## தேவாரம்

சலம்பூ வொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த் தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறை உறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்கெடுத் துரைக்கேன்
ஆண்ட நீ அருளிலை யானால்
வார் கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள் புரியாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

தாயினேரிரங்குந் தலைவரோ என்றும்
தமியனேன் துணைவரோ என்றும்
நாயினேனிருந்து புலம்பினாலிரங்கி
நலம்புரி பரமர் தங்கோவில்
வாயினேரரும்பு மணிமுருக் கலர
வளரினஞ் சோலை மாந்தளிர் செந்
தீயினே ரரும்பு பெரும் பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்பலமே.

## திருப்பல்லாண்டு

நிட்டையி லாவுடல் நீத்தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
சீராட்டும் திறங்களுமே சிந்தித்(து)
அட்ட மூர்த்திக்கென அகம் நெக
ஊறும் அமிர்தனுக்(கு) ஆலநீழற்
பட்டனுக்(கு) என்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க
பூதபரம் பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுக
சீதவள வயற் புகலி திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

## திருப்புகழ்

உம்பர் தருத்தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்தனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பி தனக் காகவனத் தணைவோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானை முகப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org